## பெந்தொட பிரதேச சபை
## காலி மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 ஜூன் 14 திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து பெந்தொட பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகள் திருத்தச் செலவுகள் ரூபா 225,214 தொகையினை மூலதனப்படுத்தியிருக்க வில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | நிர்மாணிப்பதற்கு உத்தேசித்திருந்த ஹபுருகல கட்டிடத்தொகுதிக்காக சபையின் பங்களிப்புத் தொகை என உள்ளுராட்சித் திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 10,000,000 தொகை, முற்பணம் என காட்டப்படாமல், ரூபா 2,300,000 தொகை மூலதனச் செலவுகள் எனவும், ரூபா 7,700,000 கடன்பட்டோர் எனவும் காட்டப்பட்டு ரூபா 10,000,000 தொகை மூலதனப்படுத்தப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | மீளாய்வாண்டிற்காக மதிப்பிடப்பட்ட நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,040,347 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரியான தகல்களை பெற்று சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை ரூபா 4,713,199 தொகைக்காக மற்றும் கணக்காய்வுக் கட்டணத்திற்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## (ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப் பட்டிருந்த 06 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகள் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 32,984,736 இற்கான வித்தியாசம் காணப்பட்டது. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீண்ட காலமாக காணப்படும் சமமின்மை கள் என்பதால் எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## (இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப் படாமையால் கூட்டுத்தொகை ரூபா 140,240,670 தொகைக்கான 07 கணக்கு விடயங்களை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## (ஈ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### (i) பெற வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| விபரம் | தொகை ரூபா. | அறவிடாமல் காணப் பட்ட காலம் வருடம் | | |
| பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் | 16,379,501 | 03 முதல் 10 | பெற வேண்டிய கணக்கு மீதியை அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| பெற வேண்டிய நிர்மாணவேலை உதவி | 2,701,046 | 04 முதல் 07 | பெற வேண்டிய கணக்கு மீதியை அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| முற்கொடுப்பனவு கள் | 159,278 | 04 முதல் 15 | பெற வேண்டிய கணக்கு மீதியை அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| சம்பள மீளளிப்பு | 104,000 | 09 முதல் | பெற வேண்டிய கணக்கு மீதியை அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### (ii) <u>செலுத்த வேண்டிய கணக்குகள்</u>

| | | |
|---|---|---|
| * 2016 ஆண்டுக்கு முதல் காணப்படும் ரூபா 6,890,074 தொகைக்கான நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் மீதிகள் மற்றும் 1991 ஆண்டு முதல் 2012 ஆண்டு வரை ரூபா 859,446 தொகைக்கான 07 செலவுக் கடன்கொடுத்தோரை தீர்ப்பதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதியை தீர்க்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.4 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி ரூபா. | இணக்கமின்மை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 217 மற்றும் 218 | -- | சபைக்குச் சொந்தமான அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொண்டிருக் காததுடன் பீ.எஸ் 46 இலக்க படிவத்தின் பிரகாரம் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் உரிய முறையில் நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை 571 | 1,304,717 | 02 வருடங்களை விட மிகையான காலம் கடந்துள்ள வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 14,009,586 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 15,949,889 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருட இறுதியில் உள்ளவாறு பணமாற்றல் கணக்கில் வரவு மற்றும் செலவு மீதி ஒன்றுக்கொன்று சமப்பட வேண்டியதுடன், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் ரூபா 73,102 இற்கான வரவு மீதி ஒன்று காணப்பட்டது. | உரிய முறையில் கணக்கீடு மேற்கொண்டு கணக்கை தீர்க்க வேண்டும். | பந்தியில் குறிப்பிட் டுள்ள நிலைமையை ஏற்றுக் கொள்கிறேன். எதிர்காலத்தில் சரி செய்வேன். |

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 22,123,117 | 18,156,859 | 18,283,719 | 10,121,943 | 13,667,900 | 23,956,022 | 17,277,023 | 10,125,943 |
| வாடகை | 1,270,000 | 528,560 | 1,038,522 | 50,050 | 1,562,000 | 1,018,700 | 985,862 | 102,883 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 626,500 | 635,150 | 727,350 | 18,250 | 897,500 | 874,135 | 930,235 | 43,225 |
| ஏனைய வருமானங்கள் | 4,189,000 | 321,807 | 3,589,932 | 5,040 | 4,629,900 | 4,654,646 | 4,654,646 | 1,040 |
| | 28,208,617 | 19,642,376 | 23,639,523 | 10,195,283 | 20,757,300 | 30,503,503 | 23,847,766 | 10,273,091 |

### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது அறவிடப்பட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 29,915,467 தொகை எனினும், சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 23,638,523 தொகையாக காணப்பட்டமையால், மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 10,195,283 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வருமானத்தை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 2.3.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 933,812 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 35,398,665 தொகை பெறவேண்டி இருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விதிக்கப்பட்டிருந்த துணை விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவதற்காக வருடாந்த செயல் திட்டம் ஒன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | துணைவிதிகளின் படி வருடாந்த செயல் நடவடிக் கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## (ஆ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையின் அதிகாரப் பிரதேசத்தில் சேகரமாகும் குப்பைகள் சபைக்கு சொந்தமான ஜம்புகஹபிடிய வத்த விளையாட்டுத் திடலில் அகற்றப்படுவதுடன், இந்தக் காணி சுற்றாடல் நகர் மற்றும் நகரத்துக்கு அண்மித்து உள்ள மக்கள் செறிந்துவாழும் பிரதேசமாக காணப்பட்டமையால், குப்பைகளில் இருந்து வீசும் துர்நாற்றம் மற்றும் நுளம்புத் தீங்குகளில் இருந்து பொதுமக்கள் தாக்கப்பட்டுக் கொண்டிருந்தனர்.<br><br>அதே போல் 2017 ஏப்ரல் 20 ஆந் திகதிய 2015/53 இலக்கங் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நீண்டகாலத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை. | நீண்டகாலத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம் முறையாக செய்யப்பட வேண்டும். | காணி ஒன்று பெற்ற பின்னர் நீண்டகால வேலைத்திட்டம் ஒன்று தயாரிப்பேன். |

## (இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகலாவிய சுட்டிகள் மூலம் சபையின் அதிகாரப் பிரசேத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்டகாலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்திக்கான நீண்ட காலத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பொது மக்களின் வாழ்க்கை நிலை உயர்த்த வேண்டும். | அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக எதிர்காலத்தில் திட்டம் ஒன்று தயாரிக்கின்றேன். |

**3.2 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பதவியணித் திட்டத்தின் அங்கீகரிக்கப் பட்ட எண்ணிக்கையை மிகைத்து மிகை ஊழியர் எண்ணிக்கை 05 காணப்பட்ட துடன், வெற்றிடங்களின் எண்ணிக்கை 11 இருந்தது. மிகைப் பதவியணியை முறைப்படுத்துவதற்கும் வெற்றிடப் பதவியணிகளை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வெற்றிடங்களுக்கு முறைப்படி ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெற்றிடங்களுக்கான அங்கீகாரத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஆ) | ஓய்வுபெற்ற, சேவையை வெறிதாக்கிய மற்றும் இறந்த ஊழியர்கள் 29 பேரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 239,416 இற்கான ஊழியர் கடன்தொகை ஒன்று நீண்ட காலமாக அறவிடப்பட்டிருக்க வில்லை. | அறவிடப்படாத ஊழியர் கடன் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்காக நடவடிக்கை எடுப்பேன். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.3.1 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் கப் வண்டியின் என்ஜின் முற்றாக திருத்துவதற்காக ரூபா 802,884 தொகை செலவிடப்பட்டு இருந்த போதிலும், ஒரு வருட உத்தரவாத காலத்திற்கு முன்னர் என்ஜின் செயற்படாத நிலைமை அடைந்துள்ளது. சாரதிகளுக்கு வழங்கியிருந்த அறிவுரை களை கடைபிடிக்காமையால் இதன் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முடியாது என திருத்த வேலை சாட்டப்பட்டிருந்த நிறுவனம் சபைக்கு அறிவித்திருந்ததுடன் மீண்டும் திருத்த வேலைக்காக வாகனத்தின் முகவர் நிலையத்தின் மூலம் ரூபா 2,682,755 இற்கான மதிப்பீடு ஒன்றினை பெற்றிருந்தது. இது தொடர்பாக ஆரம்ப விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டுமென இயந்திரப் பொறியியலாளர் 2018 ஏப்ரல் 05 திகதி கடிதத்தின் மூலம் அறிவித்திருந்த போதிலும் 2019 பெப்ரவரி 15 திகதி வரை ஆரம்ப விசாரணை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | ஆரம்ப விசாரணை மேற்கொள்ளப்பட்டு, பொறுப்புச் சொல்ல வேண்டிய நபர்களை இனங்கண்டு நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளூராட்சி திணைக்களத்தின் ஊடாக ஆரம்ப விசாரணை நடாத்தப்பட்டு வருகின்றது. |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | குறிக்கோள்சார் கருமங்களுக்காக பயன்படுத்தப்படாமையினால் ஒரு செலவு விடயத்தில் மொத்த ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இலக்கு செலவுகளை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | 02 வருமான விடயங்களில் பிரதிகூல மான விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 5,870,079 தொகை காணப்பட்ட துடன், அவை 21 சதவீதம் முதல் 99 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இலக்கு வருமானங் களை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | 04 செலவு விடயங்களின் கூட்டுத் தொகை ரூபா 16,629,664 தொகைக் கான சேமிப்புக்கள் காணப்பட்டதுடன், அவை 23 சதவீதம் முதல் 65 சதவீதம் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இலக்கு செலவுகளை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134 இன் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரின் (தென்மாகாண) 2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா/யஹ/01/நா.ச.லே கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்த துடன், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திரு க்கவில்லை. | நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை யின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |